# அமெரிக்கப் பயணச் சிறகுகள் 1

## உங்களில் ஒருவன் கடிதம்... முதல் பக்கத் தொடர்ச்சி

**வரலாற்றுச் சிறப்புமிக்க சான் பிரான்சிஸ்கோ!**

1906–ஆம் ஆண்டு பெருமளவில் கட்டி முடிக்கப்பட்டு விட்ட இந்தக் கட்டடம் அப்போது ஏற்பட்ட நிலநடுக்கத்தால் பெரிதும் சேதமடைந்திருக்கிறது. எனினும், ஜூலியா மார்கன் எனும் புகழ்பெற்ற கட்டடக்கலை வல்லுநரின் துணையுடன் அது புனரமைக்கப்பட்டு 1907–ஆம் ஆண்டு திறக்கப்பட்டது. சான் பிரான்சிஸ்கோ நகரையே பெரும் அழிவுக்குள்ளாக்கிய நிலநடுக்கத்தில் இருந்து அந்நகரம் எப்படி மீண்டு மேலெழுந்து வந்தது என்பதற்கான வாழும் சாட்சியமாக இன்றளவும் இந்த ஓட்டல் திகழ்கிறது. ஐ.நா. சாசன உருவாக்கமும் இங்கு நடந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. அமெரிக்காவின் வரலாற்றுச் சிறப்புமிக்க இடங்களுக்கான தேசிய பதிவேட்டிலும் இது இடம்பெற்றுள்ளது. மேற்கத்திய இசையுலகின் புகழ்பெற்ற கிராமி விருதுகளைப் பல முறை வென்றுள்ள பிரபல பாடகரும் மனித உரிமைக்கான ஐ.நா. அகதிகள் உயர் ஆணையத்தின் விருது பெற்றவருமான டோனி பென்னட், "I Left My Heart in San Francisco" என்ற தன்னுடைய புகழ்பெற்ற பாடலை முதன்முதலில் இந்த ஹோட்டலில்தான் பாடியுள்ளார். கடந்த 2016ஆம் ஆண்டு அவரது 90–ஆவது வயதில் ஃபேர்மாண்ட் ஹோட்டலின் வெளியே அவரது சிலை, அவரது முன்னிலையிலேயே திறந்து வைக்கப்பட்டது.

சான் பிரான்சிஸ்கோ நகரம் அமெரிக்காவில் கலிபோர்னியா மாநிலத்தில் அமைந்துள்ளது. சமூகநீதிக்கும், மனித உரிமைக்குமான குரல்களும் அதன் விளைவான சட்டங்களும் கலிபோர்னியா மாநிலத்தை அமெரிக்க ஐக்கிய நாட்டில் தனித்துவமான அடையாளத்துடன் வெளிப்படுத்துகிறது. நீண்டகாலமாக இங்கு ஜனநாயகக் கட்சியின் ஆட்சியே நடைபெற்று வருகிறது. அமெரிக்காவுக்கு இதற்கு முன் நான் பயணித்திருந்தாலும், தமிழ்நாட்டின் முதலமைச்சராக மேற்கொண்ட பயணத்தில் முதலில் சென்று இறங்கியது கலிபோர்னியா மாநிலத்தின் சான் பிரான்சிஸ்கோவாக அமைந்தது.

தொடர்ச்சியான விமானப் பயணமும், இந்தியாவுக்கும் அமெரிக்காவுக்குமான நேர வித்தியாசமும் களைப்பை ஏற்படுத்தியிருந்ததால் அன்றிரவு நன்றாக ஓய்வெடுத்துவிட்டு, மறுநாள் வழக்கம்போல அதிகாலையில் எழுந்துவிட்டேன். வெளியே குளிர் காற்று வீசிக் கொண்டிருந்தது. அதனால், உள்ளே இருந்த உடற்பயிற்சிக் கூடத்திலேயே ஒரு மணிநேரம் நடைப்பயிற்சி உள்ளிட்டவற்றை முடித்துவிட்டு, முதலீட்டாளர்கள் சந்திப்பிற்கு ஆயத்தமானேன்.

**ஃபார்ச்சூன் 500 நிறுவனங்களுடன் ஒப்பந்தங்கள்!**

முன்கூட்டியே அமெரிக்கா சென்றிருந்த தம்பி டி.ஆர்.பி.ராஜா தலைமையிலான தொழில்துறைகுழு சான்பிரான்சிஸ்கோவில் உள்ள தொழில் நிறுவனங்களுக்குச் சென்று பார்வையிட்டு, உயர் அலுவலர்களுடன் உரையாடி, எந்தெந்த நிறுவனங்கள் தமிழ்நாட்டில் முதலீட்டிற்கு உகந்தவையாக இருக்கும் என்பதை அறிந்து அவர்களுக்கு அழைப்பு விடுத்திருந்தனர். அந்த நிறுவனங்கள் கொடுத்திருந்த தேதிகளின் அடிப்படையில் ஒவ்வொரு நிறுவனத்துடனான சந்திப்பு நடந்தது.

ஆகஸ்ட் 29 அன்று முதலில் என்னை வந்து சந்தித்த நிறுவனம், ஃபார்ச்சூன் 500 எனப்படும் உலகின் முன்னணி நிறுவனங்களில் ஒன்றான நோக்கியா நிறுவனமாகும். அவர்கள் வந்தவுடனேயே ஒரு புகைப்படத்தை என்னிடம் கொடுத்தனர். 1997–ஆம் ஆண்டு உங்களில் ஒருவனான நான் சென்னை மாநகரத்தின் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் மேயர் என்ற பெருமையைப் பெற்றிருந்த நேரத்தில் என்னை நோக்கியா குழுமத்தைச் சேர்ந்த அல்காடெல் நிறுவனத்தின் தலைவர் சந்தித்த புகைப்படம்தான் அது. இனிய நினைவுகளுடனான தொடக்கமாக அமெரிக்க முதலீட்டாளர்களின் சந்திப்பு அமைந்தது.

நோக்கியா நிறுவனத்துடன் நடந்த சந்திப்பின் விளைவாக, சென்னை சிறுசேரி சிப்காட்டில் 450 கோடி ரூபாய் முதலீட்டில் 100 நபர்களுக்கு வேலைவாய்ப்பளித்திடும் வகையில் உலகின் மிகப்பெரிய நிலையான நெட்வொர்க் சோதனை வசதி கொண்ட புதிய ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு மையம் அமைப்பதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் வெற்றிகரமாக நிறைவேறியது.

அதனைத் தொடர்ந்து, ஃபார்ச்சூன் 500 இல் இடம்பெற்றுள்ள மற்றொரு நிறுவனமான பேபால் நிறுவனத்துடன் 1000 பேருக்கு வேலைவாய்ப்பு அளித்திடும் வகையிலான செயற்கை நுண்ணறிவிற்கான மேம்பட்ட வளர்ச்சி மையம் அமைப்பதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் போடப்பட்டது. அதுபோலவே, செமிகண்டக்டர்களை வடிவமைக்கும் கருவிகளின் உற்பத்தியில் முன்னணி வகிக்கும் ஈல்ட் இன்ஜினியரிங் சிஸ்டம்ஸ் என்ற நிறுவனம், கோயம்புத்தூர் சூலூரில் 150 கோடி ரூபாய் முதலீட்டில் 300 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில் குறைக்கடத்தி உபகரணங்களுக்கான தயாரிப்பு மேம்பாடு மற்றும் உற்பத்தி வசதி நிறுவனத்தைத் தொடங்குவதற்கு ஒப்பந்தம் போடப்பட்டது.

குறைக்கடத்தி உற்பத்தியில் புகழ்பெற்ற மற்றொரு முன்னணி நிறுவனமான மைக்ரோசிப் டெக்னாலஜி நிறுவனம் 250 கோடி ரூபாய் முதலீட்டில் 1500 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில் சென்னையில் குறைக்கடத்தி தொழில்நுட்பத்தில் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு மையம் அமைப்பதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டது. இன்பிங்ஸ் ஹெல்த்கேர் நிறுவனம் 50 கோடி ரூபாய் முதலீட்டில் 700 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில் மதுரை எல்காட்டில் தொழில்நுட்பம் மற்றும் உலகளாவிய விநியோக மையம் (G.D.C) அமைப்பதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டது.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உலக புகழ்பெற்ற தகவல் தொழில் நுட்ப அலுவலகங்களான ஆப்பிள், கூகுள், மைக்ரோசாஃப்ட் ஆகிய நிறுவனங்களை பார்வையிட்டார்.

குறைக்கடத்தி மற்றும் காட்சி உபகரணங்கள் தயாரிப்பில் உலகின் முதன்மை நிறுவனமான அப்ளைடு மெட்டீரியல்ஸ் நிறுவனம் 900 கோடி ரூபாய் முதலீட்டில் 500 பேருக்கு வேலைவாய்ப்பு அளித்திடும் வகையில் சென்னை தரமணியில் செமிகண்டக்டர் உற்பத்தி மற்றும் உபகரணங்களுக்கான மேம்பட்ட செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்ப மேம்பாட்டு மையம் அமைக்க புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்துகொண்டது.

**உலகின் முன்னணி நிறுவனங்களில் கோலோச்சும் தமிழர்கள்!**

**தமிழ்நாட்டில் முதலீடு செய்வதற்கு ஆர்வம் காட்டிய அமெரிக்க நிறுவனங்களின் உயர் பொறுப்புகளில் நம் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்கள் இருப்பது மிகுந்த மகிழ்ச்சியை அளித்தது. திராவிட இயக்கம் தந்த இடஒதுக்கீடு, உயர்கல்வி, பேரறிஞர் அண்ணா உருவாக்கிய தமிழ், ஆங்கிலம் என்ற இருமொழிக் கொள்கை, முத்தமிழறிஞர் கலைஞர் உருவாக்கிய தகவல் தொழில்நுட்பக் கொள்கை உள்ளிட்டவை அமெரிக்க நிறுவனங்களில் தமி ழர்கள் உயர்பொறுப்பில் இருப்பதற்கு அடித்தளமாக உள்ளன என்பதை உணர்ந்துகொள்ள முடிந்தது. திரைகடலோடி திரவியம் தேடும் தமிழ் மரபின் அடிப்படையில், நம் தமிழர்கள் அமெரிக்க நாட்டின் நிறுவனங்களில் கோலோச்சிக் கொண்டிருப்பது பெருமையளித்தது.**

உலகின் புகழ்பெற்ற அமெரிக்க தொழில்நிறுவனங்கள் இந்தியாவில் ஒரு மாநிலமான தமிழ்நாட்டில் முதலீடு செய்வதற்கான தேவைகள் குறித்து, தொழில்துறைச் செயலாளர் திரு. வி. அருண் ராய் இ.ஆ.ப., அவர்கள் எடுத்துரைப்பார். அடுத்ததாக, தமிழ்நாடு அரசு உருவாக்கியுள்ள தொழில்கட்ட மைப்பு, உற்பத்தியை மேம்படுத்துவதற்கான வசதிகள் குறித்து நான் விளக்கிடுவேன். அடுத்து, தொழில்துறை அமைச்சர் தம்பி டி.ஆர்.பி.ராஜா அவர்கள் நம்முடைய கொள்கைகளை விளக்குவார். அவருக்குப் பின் என்னுடைய முதன்மைச் செயலாளர் . உமாநாத் இ.ஆ.ப., தமிழ்நாட்டில் நிலவும் வாய்ப்புகள் குறித்து எடுத்துரைப்பார். பின்பு, தொழில் வழிகாட்டி நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திரு.வே. விஷ்ணு இ.ஆ.ப., அரசின் சார்பில் கையெழுத்திட புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்படும். திராவிட மாடல் ஆட்சி அமைந்த இந்த மூன்றாண்டுகளில் தொழில் வளர்ச்சிக்கான 14 கொள்கைகள் வெளியிடப்பட்டுள்ளன. அந்தக் கொள்கைகள் அடங்கிய வெளியீடுகளை அமெரிக்க நிறுவனங்களிடம் வழங்கி, அவற்றையும் விளக்கினேன். தொழில்துறையின் வளர்ச்சிக்கான ஒவ்வொரு கட்டத்தையும் உணர்ந்து, உலகத் தரத்திற்கு உருவாக்கப்பட்டுள்ள அந்தக் கொள்கைக் குறிப்புகளை அவர்கள் பாராட்டினர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் 29.8.2024 சான் பிரான்சிஸ்கோ நகரில் நடைபெற்ற முதலீட்டாளர்கள் மாநாட்டில், மைக்ரோசிப் நிறுவனத்திற்கும் தமிழ்நாடு அரசிற்கும் இடையே 250 கோடி ரூபாய் முதலீட்டில் 1500 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில் சென்னையில் குறைக்கடத்தி தொழில்நுட்பத்தில் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு மையம் அமைப்பதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது.

அமெரிக்க நிறுவனங்களைச் சேர்ந்தவர்களும் தமிழ்நாட்டில் முதலீடு செய்வதன் நன்மைகளை உணர்ந்தே இருக்கின்றனர். அவர்கள் என்னிடம் பேசும்போது, தமிழ்நாட்டில்தான் திறமையான மனித வளம் இருக்கிறது என்பதையும், தங்கள் நிறுவனத்தில் பணியாற்றுவதற்கேற்ற உயர்கல்வியையும் திறனையும் தமிழ்நாட்டில் உள்ளவர்கள் பெற்றிருக்கிறார்கள் என்பதையும் அமெரிக்க நிறுவனத்தினர் மகிழ்ச்சியுடன் பகிர்ந்து கொண்டனர்.

**தமிழ்நாட்டின் பெருமையை உணர்த்திய முதலீட்டாளர் மாநாடு!**

பகல் பொழுதில் பல்வேறு நிறுவனங்களைச் சேர்ந்த உயர் அலுவலர்களைச் சந்தித்துப் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் போடப்பட்ட நிலையில் அன்று மாலையில் முதலீட்டாளர்களுடனான மாநாடு நடைபெற்றது. இந்த கருத்தரங்கத்தைத் தமிழ்நாடு அரசின் தொழில்துறை, இந்தியத் தூதரகம், சான்பிரான்சிஸ்கோ வர்த்தகர் சங்கம் ஆகியவை இணைந்து நடத்தின. அமெரிக்காவைச் சேர்ந்த நூற்றுக்கும் அதிகமான நிறுவனங்கள் இந்தக் கருத்தரங்கில் கலந்து கொண்டது, தமிழ்நாட்டின் தொழில்துறை மீது அவர்கள் வைத்திருக்கிற நம்பிக்கையைக் காட்டியது. அந்த நம்பிக்கைக்கேற்ப, தமிழ்நாட்டின் தற்போதைய தொழில்வளர்ச்சியையும், தொழில் முதலீடுகள் செய்பவர்களுக்கு என்னென்ன வாய்ப்புகள் உள்ளன என்பதையும் திரையில் ஒளிபரப்பு செய்து தெளிவுபடுத்தியது நமது மாநில அரசின் தொழில்துறை.

இந்தியத் தூதரக அதிகாரி அவர்கள், இந்தியாவில் தமிழ்நாடு தொழில்துறையில் காட்டுகின்ற முனைப்பையும், முதலமைச்சரான என்னுடைய செயல்பாடுகளையும் எடுத்துக் கூறி, அமெரிக்க நிறுவனங்கள் தமிழ்நாட்டில் அதிகளவில் முதலீடு செய்ய வேண்டும் எனக் கேட்டுக் கொண்டார். தொழில்துறை அமைச்சர் தம்பி டி.ஆர்.பி.ராஜா, கடந்த மூன்றாண்டுகளில் தமிழ்நாடு தொழில்துறையில் நடத்தியுள்ள பாய்ச்சலைத் தகவல்களுடனும் ஆதாரங்களுடனும் எடுத்துரைத்து முதலீடு செய்யும்படி கேட்டுக்கொண்டார்.

ஃபர்ஸ்ட் சோலார் என்கிற சூரிய மின் உற்பத்திக்கான கருவிகளைத் தயாரிக்கும் புகழ்பெற்ற கம்பெனியின் தலைமைச் செயல் அதிகாரியான மார்க் விட்மர் பேசும்போது, தமிழ்நாடு அரசுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் போடப்பட்டு, 18 மாதங்களிலேயே அனைத்து அனுமதிகளையும் பெற்று, தொழிற்சாலையையும் கட்டி முடித்து, அதனைத் திறந்து பணியையும் தொடங்கிவிட்டோம்" என்று சொன்னது, அந்த மாநாட்டில் கலந்துகொண்ட அமெரிக்க முதலீட்டாளர்களுக்குப் பெரும் நம்பிக்கையை அளித்தது. அந்த நம்பிக்கையை மேலும் அதிகப்படுத்தும் வகையில், அமெரிக்காவின் டிஜிட்டல் ரியாலிட்டி என்ற டேட்டா சென்டர் தமிழ்நாட்டில் தனது நிறுவனத்தைத் தொடங்குவதற்கான அடிக்கல் நாட்டு விழாவும் சான் பிரான்சிஸ்கோ கருத்தரங்கில் நடைபெற்றது. டேட்டா சென்டர் நிறுவனத்தின் தலைமை வருவாய் அலுவலர் காலின் மெக்லின் தனது உரையில் தமிழ்நாட்டில் தொழில் முதலீட்டிற்கான நல்வாய்ப்புகளை எடுத்துரைத்தார்.

இத்தகைய சிறப்பான - பயன்களைத் தரும் நிகழ்வில் அமர்ந்திருந்தபோது, கழகம் ஆறாவது முறையாக ஆட்சிப் பொறுப்புக்கு வந்த பிறகு, வெளிநாடுகளில் இதுபோல ஆறு முறை முதலீட்டாளர் மாநாடுகள் நடத்தப்பட்டிருப்பதையும், தமிழ்நாட்டில் சென்னை, கோவை, தூத்துக்குடி ஆகியவற்றில் நடந்தவற்றையும் சேர்த்து மொத்தமாக 15 மாநாடுகள் நடைபெற்றிருப்பதையும் எண்ணிப் பார்த்தேன்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் (29.8.2024) சான் பிரான்சிஸ்கோவில் நடைபெற்ற முதலீட்டாளர்கள் மாநாட்டில், அப்ளைடு மெட்டீரியல்ஸ் நிறுவனத்திற்கும் தமிழ்நாடு அரசிற்கும் இடையே 500 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில் சென்னை, தரமணியில் செமிகண்டக்டர் உற்பத்தி மற்றும் உபகரணங்களுக்கான மேம்பட்ட செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்ப மேம்பாட்டு மையம் அமைப்பதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது.

சான் பிரான்சிஸ்கோவில் நடந்த முதலீட்டாளர் மாநாட்டில் நான் உரையாற்றும்போது, வாய்ப்புகளை வழங்கக்கூடிய அமெரிக்க நாட்டிற்கு வந்திருப்பதைப் பெருமையாகக் கருதுவதை என் உரையில் எடுத்துக் கூறி, தமிழ்நாட்டில் 6–ஆவது முறையாக ஆட்சி அமைத்திருக்கும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் முதலமைச்சர் என்பதையும், எளிய மக்களுக்கான இந்த இயக்கத்தை பேரறிஞர் அண்ணா கட்டிய மைத்ததையும், அந்த அண்ணா வழியில் நவீனத் தமிழ்நாட்டை முத்தமிழறிஞர் கலைஞர் உருவாக்கியதையும் எடுத்துக் கூறி, இந்தியாவில் அதிகளவில் நகர்ப்புறமயமான மாநிலம் தமிழ்நாடுதான் என்பதால், இங்கு தொழில் வளர்ச்சிக்கான வசதியான கட்டமைப்புகள் இருப்பதையும் அவர்களிடம் கூறினேன். ஆசிய நாடுகளின் நுழைவாயிலாக சென்னை அமைந்துள்ள நிலையில், தமிழ்நாட்டில் ஏறத்தாழ 39 ஆயிரம் தொழிற்சாலைகளும், அதில் பணியாற்றக்கூடிய 2.6 மில்லியன் அளவிற்குப் பணியா ளர்களும் இருப்பதால், இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் தமிழ்நாட்டின் பங்கு அதிகமாக உள்ளதையும் கூறி, அமெரிக்க நிறுவனத்தினர் தமிழ்நாட்டில் தாராளமாக முதலீடு செய்ய முன்வர வேண்டும் என்பதையும், அவர்களுக்குத் தேவைப்படும் கட்டமைப்புகளைத் தமிழ்நாடு அரசு நிறைவேற்றித் தரும் என்ற உறுதியையும் வழங்கினேன்.



சிறுகதை மன்னன் எஸ்.எஸ்.தென்னரசு அவர்களின் பேரன் கதிர் தென்னரசு எழுதிய கடிதம்!

**அயலகத்திலும் தமிழ் உறவு - கழகக் கொள்கை உணர்வு**

மனதிற்கும் மாநிலத்திற்கும் நிறைவான வகையில் அமைந்த இந்த முதலீட்டாளர் மாநாடு முடிவடைந்தபிறகு, ஃபேர்மாண்ட் ஹோட்டலுக்குத் திரும்பியபோது, லாபியில் தமிழர்கள் காத்திருந்தனர். ஹோட்டலில் இருந்து புறப்படும்போதும், திரும்பி வரும்போதும், உங்களில் ஒருவனான என்னைக் காண வந்திருக்கும் தமிழர்களைக் காண்பது மகிழ்ச்சியாக இருந்தது. ஒரு சில தமிழர்கள் என்னைப் பார்த்ததுமே உணர்ச்சிவசப்பட்டு, கண் கலங்கிவிட்டார்கள். நமக்கும் அவர்களுக்கும் இருப்பது இரத்த உறவல்ல. அதைவிடவும் உயர்ந்த தமிழ் உறவல்லவா.. அந்த உணர்வுடன் அவர்களிடம் அன்பாகப் பேசி, ஆறுதல்படுத்தி, அவர்கள் வழங்கிய புத்தகங்களையும் பூங்கொத்துகளையும் அன்புடன் பெற்றுக்கொண்டேன். ஒருசிலர் தங்கள் புத்தகங்களில் என் கையொப்பம் பெற்று மகிழ்ந்தனர். பலர் வாழ்த்துக் கவிதைகள் வழங்கினர். சிலர் கடிதங்களை அனுப்பியிருந்தார்கள்.

அமெரிக்கவாழ் தமிழர்கள் அனைவரும் அன்பு காட்டிய நிலையில், கழகக் குடும்பத்தைச் சேர்ந்தவர்களிடம் கூடுதல் பாசம் வெளிப்படுவது இயல்புதானே.. அப்படியொரு பாசத்தை, தென்பாண்டிச் சிங்கமாக முகவை மாவட்டத்தில் கழகத்தைக் கட்டிக் காத்தவரும், சிறுகதை மன்னர் எனப் பெயர் பெற்றவருமான எஸ்.எஸ். தென்னரசு அவர்களின் குடும்ப உறவு மூலம் அமெரிக்காவில் கண்டுணர்ந்தேன். தென்னரசு அவர்களின் பேரன் கதிர் தென்னரசு தற்போது அமெரிக்காவில் வசிக்கிறார். அவர் பழைய முரசொலி நாளிதழில் வெளியான தன்னுடைய கையெழுத்திலான கடிதத்தை என்னிடம் அளித்தார். அது வெளியானபோது அவர் நான்காம் வகுப்பு மாணவர்.

2001–ஆம் ஆண்டு ஜூன் மாதக் கடைசியில் நள்ளிரவு நேரத்தில், அ.தி.மு.க. ஆட்சியின் போலீசார் நம் உயிர்நிகர் தலைவர் கலைஞர் அவர்களின் வீட்டின் பூட்டை உடைத்து உள்ளே சென்று, பொய்வழக்கில் கைது செய்து, இரக்கமின்றி இழுத்துச் சென்றபோது நாடே பதறிய நிலையில், நான்காம் வகுப்பு மாணவரான கதிர் தென்னரசும் பதறியிருக்கிறார். "டியர் கலைஞர் தாத்தா" என்று தொடங்கி, சிறைவாசத்தில் இருந்த தலைவர் கலைஞருக்குக் கடிதமும் எழுதியிருக்கிறார்.

தலைவர் அவர்கள் சிறை வாசலில் உட்கார்ந்திருப்பதைப் பார்த்து அழுதுவிட்டதையும், அவரை ஆறுதல்படுத்திய அவரது அம்மா, ஒரு வாரம் கழித்து, தாத்தாவைப் பார்க்கப் போகலாம் என்று சொன்னதாகவும் அந்தக் கடிதத்தில் எழுதியிருந்த கதிர், தன்னுடைய அப்பா தன் மீது செல்லமாக இருப்பார் என்றும், ஒரு நாள் முரசொலி நாளிதழ் மீது சூடான காபி டம்ளரை வைத்துவிட்டதால் அப்பா தன்னை அடித்துவிட்டார் என்றும் அந்தக் கடிதத்தில் எழுதியிருக்கிறார். "தாத்தா.. நான் டெய்லி முரசொலி கடிதங்கள் வாசிச்சு தமிழ் நல்லா பழகிட்டேன்" என்று குறிப்பிட்டிருப்பதுடன், எமர்ஜென்சி காலத்தில் தனது அம்மா இளவரசியின் கேள்விக்குத் தலைவர் கலைஞர் பதில் எழுதி அனுப்பியதைக் குறிப்பிட்டு, என் கேள்விக்கும் பதில் சொல்வீங்களா? என்று கேட்டு, அ.தி.மு.க ஆட்சியின் கொடு ங்கோல் சிறையில் இருந்த கலைஞரின் மனதுக்கு இதமான மருந்து தடவும் வகையில் அவரின் பிஞ்சுக் கரம் கடிதம் எழுதியிருக்கிறது. அதைத் தலைவரின் மூத்த பிள்ளையான முரசொலி 20-7-2001 அன்று வெளியிட்டிருக்கிறது. காலத்திற்கும் நிலைத்து நிற்கும் அந்தக் கருவூலத்தைத் தான் கதிர் தென்னரசு அமெரிக்காவில் என்னிடம் வழங்கி மகிழ்ந்தார். அதைப் படிக்கும்போது எத்தனையெத்தனை உணர்வலைகள். கடல் கடந்து வந்தாலும் கழகக் குடும்பத்தி னரின் உணர்விலும் உதிரத்திலும் கறுப்பு - சிவப்புக் கொள்கையே உயிரோட்டமாக இருக்கிறது என்பதை உணர்ந்து கொள்ள முடிந்தது.

தொடர்ச்சி 4–ஆம் பக்கம்